“தமிழ் எங்கள் உயிருக்கு நேர்”

# தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து

# பொதுத்தேர்வு 2018

## தமிழ்மொழி ஆண்டு 11

## புலன்மொழித்தேர்வு

**கேட்டலும் விளங்கிக்கொள்ளுதலும்**

சுட்டெண் : ______________________

**ஒலியிறுவெட்டில் ஒலிக்கப்பெறும் உரைப்பகுதியையும், நேர்காணலையும் கேட்டு, விளங்கிக்கொண்டு, கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை தருக.**

## ‘அ’ பகுதி

**01. கீழ்க்காணும் கூற்றுகள் சரியாயின் ‘சரி’ எனவும் பிழையாயின் ‘பிழை’ எனவும் பெட்டியினுள் அடையாளமிடுங்கள்.**

| | சரி | பிழை |
|---|---|---|
| 1. வையகமெங்கும் அனைத்துத் துறைகளிலும் கணினியின் செல்வாக்குக் காணப்பெறுகிறது. | | |
| 2. கணினிச் செயற்பாடுகளின் அடிப்படைமொழி ஆங்கிலம் ஆகும். | | |
| 3. செம்மொழிகளுள் தமிழ்மொழியும் ஒன்றாகும். | | |
| 4. கணினியில் தமிழ்ப்பயன்பாடு 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தொடங்கியது. | | |
| 5. இன்று கணினியில் பல்வேறு தமிழ் எழுத்துருக்கள் உருவாக்கப்பெற்றுள்ளன. | | |
| 6. இணையத்தின் ஊடாகத் தமிழ்மொழி பன்முகப்படுத்தப்பெற்ற வகையில் பயன்படுத்தப்பெறுகிறது. | | |
| 7. தமிழ் கற்பிப்பதற்கும், கற்பதற்கும் பயன்பெறும் சமூகவலைத்தளங்களில் ஸ்கைப்பும் ஒன்றாகும். | | |
| 8. சமூகவலைத்தளங்களான டுவிட்டர், முகநூல் போன்றவற்றில் நேரடியாகத் தமிழில் தட்டச்சுச் செய்ய முடியாது. | | |

**(8×½=4புள்ளி)**

## ‘ஆ’ பகுதி

**02. சரியான விடையினைத் தெரிவுசெய்து அதன் கீழுள்ள பெட்டியினுள் அடையாளமிடுங்கள்.**

1. கணினியில் தமிழ்ப்பயன்பாடு பற்றி அறிந்துகொள்ள விரும்பியவர்கள்

| | | |
|---|---|---|
| மாணவர்கள் | பேராசிரியர் | ஆசிரியர்கள் |
| ☐ | ☐ | ☐ |

2. தமிழில் தோன்றிய முதலாவது மென்பொருளை உருவாக்கியவர்

| | | |
|---|---|---|
| ஸ்ரீநிவாசன் | கல்யாணசுந்தரம் | சுந்தர் பிச்சை |
| ☐ | ☐ | ☐ |

3. முதன்முதலில் தமிழில் எழுதி அச்சுப்பதிப்புச் செய்ய உதவிய மென்பொருள்

| | | |
|---|---|---|
| ஆதமி | கூகிள் | மென்தமிழ் |
| ☐ | ☐ | ☐ |

4. பாமினி எழுத்துருவை உருவாக்கியவர்

| | | |
|---|---|---|
| கல்யாணசுந்தரம் | கதிர்வேற்பிள்ளை | ஜயாத்துரை |
| ☐ | ☐ | ☐ |

5. தமிழில் தட்டச்சுச் செய்யும் போது ஏற்படும் எழுத்துப்பிழைகளைத் திருத்த உதவும் மென்பொருள்

| | | |
|---|---|---|
| எழுத்துப்பிழைதிருத்தி | மயிலை | ஒளியெழுத்துணரி |
| ☐ | ☐ | ☐ |

6. சிவா ஜயாத்துரை என்பவரால் உலகிற்கு அறிமுகப்படுத்தப்பெற்றது

| | | |
|---|---|---|
| பாமினி | மின்னஞ்சல் | மென்பொருள் |
| ☐ | ☐ | ☐ |

**(6×½=3புள்ளி)**

**03. கீழ்க்காணும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.**

1. எதனைப் பற்றிய கண்காட்சி நடைபெற்றது?

_______________________________________________

2. தமிழில் தோன்றிய முதலாவது மென்பொருள் எது?

_______________________________________________

3. தமிழில் தட்டச்சுச் செய்யும் போது ஏற்படும் சந்திப்பிழைகளைத் திருத்த உதவும் மென்பொருள் எது?

_______________________________________________

4. மின்னஞ்சலைக் கண்டுபிடித்த தமிழர் எந்த நாட்டைப் பூர்வீகமாகக் கொண்டவர்?

_______________________________________________

5. பன்மொழிப்புலமை பெற்றவர்களாகக் கூறப்பெற்றவர்கள் யார்?

_______________________________________________

6. கணினியில் தமிழ்ப்பயன்பாடு தொடர்பான விளக்கங்களை வழங்கியவர் யார்?

_______________________________________________

**(6×½=3புள்ளி)**